5.1.2023

வாசா.2 தங்கவேல்சாமி

அ.வ.எண்.334/2017

1, 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பிறந்து வளர்ந்தது சின்னப்புத்தூர் என்றால் சரியல்ல கம்மாளப்பட்டி. சின்னப்புத்தூரில் உள்ள தீர்த்தகிணறு தோட்டத்திற்கு எனது தகப்பனாரின் காலத்திலேயே நாங்கள் குடிவந்துவிட்டோம். எங்களது வீட்டின் கதவு எண். 3/342 எஸ்பி வடுகபாளையம். எனது கிரைய ஆவணத்தின் செஞ்சேரிப்புதூர் கிராமம் என முகவரி கொடுத்துள்ளேன் என்றால் செஞ்சேரிப்புதூர் கிராமத்தில் தான் சின்னப்புத்தூர் வருகிறது. நான் குடியிருக்கும் தீர்த்த கிணறு தோட்டத்திற்கு தாவா சொத்திற்கும் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். ஒரு சொத்தை விலைக்கு வாங்குமுன் அதை யாருக்கு பாத்தியப்பட்டது என்று விசாரணை செய்துதான் விலைக்கு வாங்கினேன் என்றால் நானும் அப்படிதான் வாங்கினேன். யாரை விசாரித்து வாங்கினேன் என்றால் அவர் பெயர் குட்டைகாட்டுயப்பன் அவர் தற்பொழுது இறந்துவிட்டார். தாவா சொத்தின் தற்பொழுது விஸ்தீரண்ம் 2 ஏக்கர் 35 செண்ட்.

எனது கிரையம்செய்து கொடுத்தவரின் பெயர் நாச்சிமுத்து. அவர் எனது வீட்டிலிருந்து சுமார் 4 கிலோமீட்டர் தள்ளி கூடுதாங்கி தோட்டத்தில் குடியிருக்கிறார். நாச்சிமுத்துவுடன் உடன் பிறந்தவர் இருவர் அவர்களின் பெயர் தெரியாது. நாச்சிமுத்துவைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். சின்னப்புத்தூரில் 103 கதவு எண் கொண்ட வீடு உள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வாக்காளர் பட்டியலில் உள்ளது என்னுடைய வீட்டுவிபரம் கிடையாது. சின்னப்புத்தூர் ஊருக்குள் எனக்கும் நாச்சிமுத்துவிற்கும் வீடு உள்ளது என்றால் இல்லை. ஒரு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு அது யாருக்கு பாத்தியப்பட்டது என்று மூலஆவணங்களை பார்வையிடவேண்டும் என்றால் சரிதான். அதுபோல் வில்லங்கம் எடுத்து பார்க்கவேண்டும் என்றால் சரிதான். அதேபோல் வருவாய்துறை ஆவணங்களை பார்க்கவேண்டும் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரையம்பெறுவதற்கு முன்பு அவ்வாறுதான் ஆவணங்களை சரிபார்த்து வாங்கினேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு நாச்சிமுத்துவின் பட்டா பாஸ்புத்தகம் மந்திரியப்பனின் பட்டா நாச்சிமுத்துவின் கிரைய பத்திரம் ஜெராக்ஸ், மந்திரியப்பன் கருப்புசாமி கிரைய பத்திரம் மற்றும் பட்டாபாஸ் புத்தகம் சாட்சி மீண்டும் பட்டாபுத்தகம் மட்டும் ஆகிய ஆவணங்களை பார்த்தாக சாட்சியம் அளிக்கிறார். மந்திரியப்பன் கருப்புசாமி ஆகியோரின் பட்டா பாஸ்புத்தகம் தவிர

மூலஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை என்றால் இல்லை. பட்டா உரிமைக்கான ஆவணங்கள் இல்லை என்றும் அது வைத்துகிரையம் பெறமுடியாது என்று எனக்கு தெரியும் என்றால் தெரியாது. கருப்புசாமி, மந்தியப்பன் அவர்களின் அப்பா பெயர் தெரியாது. சாட்சி முத்துகவுண்டர் மகன் கருப்புசாமி என்று அருணாச்சல கவுண்டர் மந்திரியப்பன் என்றும் சாட்சியம் அளிக்கிறார். கருப்புசாமி மந்திரியப்பனின் மூலஆவணங்கள் அவர்களது தக்ப்பனாரின் இறப்புசான்றிதழ் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கருப்புசாமியும் மந்திரியப்பனும் சித்தப்பா மகன் பெரியப்பா மகன். கருப்புசாமி மந்திரியப்பனுக்கு கந்தசாமி என ஒரு சகோதரர் உள்ளார் அது வேறு வகையறா. நான் சொல்வது தவறு என்றும் கந்தசாமியும் கருப்புசாமியும் மந்திரியப்பனும் வகையறா என்றால் சரியல்ல. கருப்புசாமி கந்தசாமி அப்பா பெயர் செல்லப்பகவுண்டர் அவருக்கு ஊருக்குள் வீடு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி அனைத்து விபரங்களும் தெரியும் என்றும் வழக்கிற்காக நான் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம்பெற்றது செல்லப்பகவுண்டர் மக்கள் கருப்புசாமி மந்திரியப்பன் இல்லை என்றும் ஆள்மாறட்டம் செய்து கருப்புசாமி மந்திரியப்பன் அவர்களிடம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல மேற்படி நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் நாச்சிமுத்துவிற்கு பொருளாராம் நெருக்கடி ஏற்பட்டதால் அதை அதற்காக கிரையம் பெற்றதாக எழுதி உள்ளது என்றால் சரியல்ல. நாச்சிமுத்துவின் மருத்துவ செலவிற்காக அவர் சொத்துக்களை விற்றார். நான் செல்வது பொய் என்றும் நாச்சிமுத்து அபபொழுது மருத்துவ செலவு இல்லை என்றும் சொத்தை நான் கிரையம் வாங்கவேண்டும் என்பதற்காக வாசகம்எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாச்சிமுத்து தாவா சொத்தில் எவ்வித உரிமையில்லாத நிலையில் அவரிடமிருந்து வாங்கிய கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புறம்எனது பூமி உள்ளது. மற்ற பகுதிகளை திருப்பூரை சேர்ந்த சிவகுமாருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது.

நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் நான்கு எல்லைகள் சொல்லப்பட்ட வள்ளியம்மாள் என்ற பெயர் என்னுடைய தாயார். தற்பொழுது அவர்களது பேரன் பெயருக்கு பத்திரம் எழுதப்பட்டுள்ளது. வள்ளியம்மாளுக்கு பூமி அவர் கிரையம்பெற்றது. அந்த புல எண் நினைவில் இல்லை. அந்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். அதற்கு தடம் தெற்கிலிருந்து வருகிறது காலையில் நினைவில் இல்லை. எனது தாயாரின் இடத்திற்கு தடம் கிடையாது என்று தடத்திக்காக தாவா சொத்தை ஆள்மாறட்டம் செய்து கிரையம் பெற்றோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள நபர்தான் மந்திரியப்பன் என்றால் சரிதான் அது பட்டா பாஸ்புத்தகம் வாசாஆ.3. என்னிடம் காட்டப்படும்

வாக்காளர் பட்டியலில் மந்திரியப்பன் கவுண்டர் என்றால் இல்லை வித்தியாசமாக உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் வாக்காளர் பட்டியலில் 426 நெ. உள்ளது மந்திரியப்பன் கவுண்டர் என்றும் வாசாஆ.3 புகைப்படத்துடன் ஒத்துபோகிறது என்றும் உண்மையை ஒப்புக்கொண்டார் வழக்கிற்காக பாதகம் ஆகிவிடும் என்று மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மந்திரியப்பனின்மனைவி பெயர் ராமாத்தாள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.3 ல் மந்திரியப்பனின் தகப்பனாரின் பெயர் அருணாச்சல கவுண்டர் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாக்காள பட்டியலில் குறிப்பிட்டுள்ள மந்திரியப்ப கவுண்டரின் தகப்பனாரின் பெயர் செல்லப கவுண்டர்என்று உள்ளது என்றால் அது மாறிவரும். மந்திரியப்ப கவுண்டருக்கு செல்லமுத்து கவுண்டர் மகன் உள்ளார் என்றால் சரிதான். வாசாஆ.2 புகைப்படத்தில் உள்ளவர்தான் கருப்புசாமி. அதேபோல் என்னிடம் காட்டப்படும் வாக்காளர் பட்டியலில் உள்ளது கருப்புசாமி புகைப்படம் என்றால் இல்லை. கருப்புசாமி மனைவி பெயர் திருமாத்தாள் இல்லை வள்ளியம்மாள். கருப்புசாமி மனைவி பயர் வள்ளியம்மாள் என்பதற்கு ஆவணங்கள் என்னிடம் இல்லை. எனக்கு கருப்புசாமி மனைவி பெயர் நன்கு தெரியும் வழக்கிற்காக மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதியின் அப்பா பழனிசாமி கவுண்டர் நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. நாச்சிமுத்து அனுபவம் செய்து வந்ததை காட்டுவதற்கு கிஸ்து ரசீதுடன் பட்டா ஆகியவை நான் பார்த்துள்ளேன். 2002 2003 க்கான ஆண்டுக்கான ரசீதுகளை பார்த்துள்ளேன். அதற்கு முன்தேதியிட்டஆவணங்கள் ்அன்றைய தேதியில் இல்லை நான் பார்க்கவில்லை. நான் சொல்வதுபோல் நாச்சிமுத்து மந்திரியப்பன் கருப்புசாமி ஆகியோர் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றும் பிரதிவாதி தகப்பனார் தான் தன் அனுபவத்தில் வைத்து இருந்தார் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் முத்துகவுண்டர் அருணாச்சல கவுண்டர் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டனர் என்றால் எனக்கு தெரியாது. முத்துகவுண்டர் அருணாச்சலகவுண்டரும் பிரதிவாதி தாத்தா சடையப்பகவுண்டரிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டு கடைசிவரை திருமணம்செய்துகொள்ளாமல் இறந்துவிட்டனர் என்றால் சரியல்ல. நான் கிரையம்பெறுவதற்கு முன்பு முத்துகவுண்டரின் இறப்பு சான்றிதழ் அருணாச்சல கவண்டரின் இறப்பு சான்றிதழ் நான் வாங்கவில்லை. நான் கிரையம்பெறும்போது தாவா சொத்தின் மதிப்பு ரூ.39400. அதற்கான வழிகாட்டுதல் மதிப்பீடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறும் என்றும் நான்கிரையம் பெறும் போது சமயத்தில் சொத்துமதிப்பு ரூ.1 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல.

தாவா சொத்து மானாவாரி என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்துபற்றி தெரியாது என்றும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/தங்கவேல்சாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2023.01.07 15:44:41 +0530

District Munsif,
Sulur.